1975 மார்ச் 14]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மானாமதுரை ஒன்றியம் சின்னக்கண்ணனூர் என்ற கிராமம் ஒரு போக்குவரத்து இல்லாத, குடிக்க தண்ணீர் இல்லாத சிரமமான நிலையில் உள்ள கிராமம் ஆகும். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு, வறட்சியான நிலையில் உள்ள தற்போது, உடனடியாக பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ஏற்படுத்திக்கொடுக்க அரசு உத்தரவு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முதலிலேயே ஆமாம் என்று சொல்லிவிட்டேன். ரூ. 1,13,500 அளவுக்கு திட்டமிடப்பட்டு இருக்கிறது. விரைவில் அந்த வேலை துவங்கப்படும்.

* 318 வினா—திரு. டி. வி. சம்பத் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தரங்கம்பாடி பேரூராட்சி மன்ற பகுதி வாழ் மக்களுக்கு குடி தண்ணீர் வழங்கும் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) & (இ) : தரங்கம்பாடி குடிநீர்த் திட்டத்திற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 16·58 இலட்சத்திற்கும் ஆண்டு பராமரிப்புத் தொகை ரூ. 44,000-க்கும் உள்ளவாறு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பரிசிலனையில் உள்ளது.

திரு. டி. வி. சம்பத் : தலைவரவர்களே, தரங்கம்பாடியைப் பொறுத்த வரையில், அங்கு வாழும் மக்கள் மீனவர்கள். ஆண்டு ஒன்றுக்கு ரூ. 44,000 அந்த ஒன்றியம் செலவு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். அங்கு வாழும் மக்கள் மீனவர்களாக இருப்பதாலும், தாழ்த்தப்பட்ட மக்களாக இருக்கிற அது வருமானம் இல்லாத காரணத்தாலும் ஊராட்சியாக இருப்பதால், அந்த தொகையை அரசே ஈடு செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அதற்குத்தான் என்ன செய்வது என்று பரிசீலித்துக்கொண்டு வருகிறார்கள். 5,000 மக்களுக்கு மேல் உள்ள நகரப் பஞ்சாயத்துக்கள் அதற்கான பணத்தை செலவிடவேண்டும். சர்க்காரே முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம், நாம் அந்த மாதிரியான திட்டங்களுக்காக எல்.ஐ.சி.யிடமிருந்து கடன் வாங்கி செலவு செய்து கொண்டிருக்கிறோம். அந்த ரூ. 44,000-ஐ

செலவு செய்ய இயலாது என்று அந்த பஞ்சாயத்து தீர்மானம் போட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் அரசுக்கு அனுப்பினால், அது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, தரங்கம்பாடி பகுதியில் இருக்கும் பெரும்பாலான மக்கள் குடிநீருக்காக அவதிப்படும் நிலை இருக்கிறது. அதிலும் குறிப்பாக மீனவர்கள் வாழும் பகுதி, கடலோரப் பகுதியாக இருப்பதால், நீண்டகாலமாக அவர்களுக்கு நல்ல தண்ணீர் வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி வரையிலாவது அந்தத் திட்டத்தை விரைவில் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அந்தப் பகுதி எனக்கும் நன்றாகத் தெரியும். அதற்காக கிட்டத்தட்ட 16.58 லட்சம் அளவில் திட்டம் போடப்பட்டு இருக்கிறது. அதை எப்படிச் செய்யலாம் என்பதை பரிசிலித்துக்கொண்டு இருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, கிராமங்களில் குடிநீர் கிணறுகள் வெட்டப்படுகின்றன. ஆனால் அவற்றில் எவ்வளவு ஆழத்திற்குப் போனாலும் தண்ணீர் வருவது இல்லை. ஆகவே, குழாய்க் கிணறுகள் போட்டு.......................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்வி தரங்கம்பாடி பற்றியது. No, that question is disallowed.

வந்தவாசி-சேதராகுப்பம் சாலை.

*319 வினா :—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வந்தவாசி-சேதராகுப்பம் இடையே உள்ள சாலையில் அரிப்புகளை தடுக்க கற்சுவர்கள் கட்டும் திட்டம் உண்டா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்தச் சாலையானது வந்தவாசியிலிருந்து 10 கிராமங்களை இணைக்கும் சாலையாக இருக்கிறது. இடையில் சுகநதி என்ற கால்வாய் வருகிறது. அதனால் அரிப்பு நிறைய ஏற்படுகிறது. ஒன்றியம் அந்தப் பணியை செய்கிற அளவுக்கு பொது நிதி அதிகம் இருக்கிறது. ஆகவே, அரசாங்கம் அவர்களே அதைச் செய்து கொள்ள அனுமதி கொடுத்து, உத்தரவு பிறப்பிக்குமா ?